**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.117/2009**

**தேதி : 12.11.2025**

**(வா.சா.1 ) – திருமதி. சாந்தி**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :– (3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில்)**

1. அ.வ.எண்.1/2007 வழக்கில் நானும், என் மகளும் 7 மற்றும் 8 பிரதிவாதிகள் என்றால் சரிதான். அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பில் எனக்கும், என் மகளுக்கும் பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் நாங்கள் எதிர்வாதம் செய்யாமல் இருந்துவிட்டோம். அந்த வழக்கு தீர்ப்பில் நாங்கள் முத்துக்குமார் என்ற வழக்கறிஞர் மூலம் எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அப்போது எங்களால் ஆவணங்களை தாக்கல் செய்ய முடியவில்லை. மேற்படி வழக்கில் 7 மற்றும் 8 பிரதிவாதிகளான எங்களுக்கு அந்த வழக்கின் தாவா 'ஏ' அட்டவணைச் சொத்தில் நாங்கள் கோரியுள்ள பாகப்பிரிவினை கிடைக்கத்தக்கது அல்ல என நாங்கள் கோரியுள்ள பரிகாரம் தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், நாங்கள் மேல்முறையீடு செய்திருக்கிறோம்.

2. மேற்படி அ.வ.எண்.1/2007 வழக்கின் தாவா சொத்தின் ஒரு பகுதியாக இந்த வழக்கு 'பி' அயிட்டச் சொத்து இருக்கும் நிலையில், முன் தீர்ப்புத் தடையால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அ.வ.எண்.1/2007 வழக்கின் வாதிகள் மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட முதல்நிலைத் தீர்ப்பாணையின்பேரில் திண்டுக்கல் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் இ.ம.எண்.31/2023 என்ற இறுதிநிலைத் தீர்ப்பாணை மனு தாக்கல் செய்து மேற்படி மனுவானது பழனி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் இ.ம.எண்.373/2023 என நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை.

3. திண்டுக்கல் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் இ.ம.எண்.31/2023 மனுவில் தற்போது எங்களுக்கு முன்னிலையாகியுள்ள வழக்கறிஞர்தான் எனக்காகவும், என் மகளுக்காகவும் 24.02.2023 அன்று முன்னிலையாகியுள்ளார்

என்றால் சரிதான். அந்த இறுதிநிலைத் தீர்ப்பாணை மனுவில் 2023ம் ஆண்டிலேயே முன்னிலையாகியுள்ளோம் என்றால் சரிதான். அ.வ.எண்.1/2007 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் மீது நாங்கள் மேல்முறையீடு தாக்கல் செய்ததாகவோ, அதன் மேல்முறையீடு வழக்கு எண் பற்றியோ இறுதிநிலைத் தீர்ப்பாணை மனுவில் சொல்லவில்லை என்றால் என் வழக்கறிஞரைத்தான் கேட்கவேண்டும். அவ்வாறு மேல்முறையீடு செய்ததாகச் சொல்லப்படும் தேதி என்னவென்றால் என் வழக்கறிஞருக்குத்தான் மேற்படி விபரங்கள் தெரியும். நான் மேல்முறையீடு தாக்கல் செய்த வருடம் என்னவென்றால் எனக்குத் தெரியாது. நான் மேல்முறையீடு தாக்கல் செய்ததாகக் கூறும் ஆவணங்களை தற்போது தாக்கல் செய்ய முடியுமா என்றால் என் வழக்கறிஞருக்குத்தான் தெரியும்.

4. மேல்முறையீடுக்கு உரிய காலத்திற்குள் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.1 திலகம் என்பவரை நாங்கள் இந்த வழக்கில் குறுக்கு விசாரணை செய்தபோது அ.வ.எண்.1/2007 வழக்கின் மீது மேல்முறையீடு செய்ததாக குறுக்குக் கேள்விகள் கேட்கவில்லை என்றால் ஞாபகமில்லை. அ.வ.எண்.205/2016 என்ற வழக்கை நான் இவ்வழக்கின் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் மீது பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். எங்கள் சுவாதீனத்திற்கு இடைஞ்சல் கொடுத்ததால் அவ்வாறான வழக்கை தாக்கல் செய்தேன். என்னுடைய சுவாதீனத்திற்கு இடைஞ்சல் செய்ததாகச் சொல்வது வழக்கிற்காகச் சொல்லப்படும் பொய் என்றால் சரியல்ல.

5. நான் சுவாதீனத்தில் இருப்பதாகச் சொல்வது வழக்கிற்காகச் சொல்லப்படும் பொய் என்றால் சரியல்ல. அ.வ.எண். 205/2016 வழக்கின் 'ஏ' அட்டவணைச் சொத்தானது அ.வ.எண்.1/2007 வழக்குச் சொத்துக்களின் ஒரு பகுதி என்றால் சரிதான். அ.வ.எண். 205/2016 வழக்கில் அ.வ.எண்.1/2007 என்ற வழக்குப் பற்றி நான் தெரிவிக்கவில்லை என்றால் ஞாபகமில்லை. அ.வ.எண். 205/2016 வழக்கின் வழக்குரையில் உள்ள விபரங்களை தற்போது என்னால் கூற முடியுமா என்றால் இரண்டு வழக்குச் சொத்துக்களைப் பற்றியும், எங்கள் சுவாதீனத்திற்கு தொந்தரவு கொடுத்ததாலும் மேற்படி வழக்கில் சொல்லியிருக்கிறோம். அ.வ.எண்.205/2016 என்ற வழக்கானது தற்போது இந்நீதிமன்றத்தில்

அ.வ.எண்.167/2021 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.205/2016 என்ற வழக்கு தாக்கல் செய்த தேதி என்ன என்றால் ஞாபகமில்லை. மேற்படி வழக்கை 2016ம் ஆண்டு அக்டோபர் மாதம் தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கை நான் தாக்கல் செய்த தேதி 24.11.2016 என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை.

6. 18.11.2016 அன்று நான் ராமசாமி, முத்துச்சாமி ஆகியோர் 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் சுவாதீனத்திற்கு இடைஞ்சல் செய்ததால் நெய்க்காரபட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு, புகார் மனு ரசீது கொடுக்கப்பட்டுள்ளதாகச் சொன்னால் சரிதான், நாங்களும் அவர்கள் மீது புகார் கொடுத்தோம். அவர்கள் கொடுத்த புகாரில் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகச் சொல்வதற்கு புகார் மனு ரசீது எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் நான் எவ்வித புகாரும் கொடுக்காததால்தான் அவ்வாறான புகார் மனு ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2 மற்றும் 3 பிரதிவாதிகள் கடந்த 19.11.2016 அன்று கொடுத்த புகாரில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பொய்யான விபரங்களைக் கூறி வழக்கை தாக்கல் செய்ததாகச் சொன்னால் சரியல்ல.

7. அ.வ.எண்.205/2016 வழக்குடன் இடைமனு ஏதாவது தாக்கல் செய்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலிருந்து எந்த உத்தரவின் அடிப்படையில் இந்த நீதிமன்றத்திற்கு மேற்படி வழக்கு மாறுதலானது என்று கேட்டால் இரண்டு வழக்குகளையும் ஒன்றாக நடத்தவேண்டும் என நாங்கள் வழக்கறிஞரிடம் சொன்னோம். அ.வ.எண்.117/2009 வழக்கானது 2009ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அ.வ.எண்.205/2016 வழக்கானது 2016ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரிதான். அ.வ.எண்.117/2009 வழக்கின் வழக்குரையும், அ.வ.எண்.167/2021 வழக்கின் வழக்குரையும் ஒன்றுக்கொன்று முரண்பாடுகளுடன் உள்ளது என்றால் சரியல்ல.

8. அ.வ.எண்.167/2021 வழக்கின் 'ஏ' அட்டவணைச் சொத்து அ.வ.எண்.117/2009 வழக்கின் 'பி' அட்டவணைச் சொத்தின் ஒரு பகுதி என்றால் சரிதான். அ.வ.எண்.117/2009 வழக்கில் முருகவேல் செட்டியார் பி மற்றும் சி

அட்டவணைச் சொத்துக்களை கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.117/2009 வழக்குரையில் நானும், என் மகளும் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி வழக்குரையில் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி தட்டச்சு செய்யப்பட்ட வாசகங்களை நாங்கள் நீக்கி, அடித்துள்ளோம் என்றால் சரிதான். அவ்வாறு நீக்கிய பரிகாரங்களை திருத்தப்பட்ட வழக்குரையில் சேர்க்க முடியாது என்றால் சரிதான்.

9. வழக்குரையில் சொல்லப்பட்ட முகவரியில் நான் பிறந்தது முதலே குடியிருந்து வருகிறேன். மேற்படி முகவரி என்னுடைய தாய் வீடு என்றால் சரிதான். திருமணத்திற்குப் பின்னிட்டும் நானும் என் கணவரும் திருப்பூரில்தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான், ஊருக்கும் வருவோம். என்னுடைய கணவரின் இறப்புச்சான்றில் என்ன முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என் தாயார் வீட்டு முகவரிதான் குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கும், என் கணவருக்கும் குடும்ப அட்டை திருப்பூர் முகவரியில்தான் இருந்ததா என்றால், திருமணம் ஆன 3–1/2 ஆண்டுகளில் என் கணவர் இறந்துவிட்டார், அவரது பெயர் அவரது வீட்டாருடன் இருந்தது, எனது பெயர் என் பெற்றோரின் குடும்ப அட்டையில் இருந்தது. எனக்கும், என் கணவருக்கும் சேர்த்து குடும்ப அட்டை இல்லை.

10. வா.சா.ஆ.8ஆன எனது கணவரின் இறப்புச்சான்றிதழில் ஆண்டிபாளையத்தில் இருந்து திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியில் என் கணவர் இறந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆண்டிபாளையம் என்பதும் என் பெற்றோர் வீடா என்றால், இல்லை. அது ரைஸ் மில் ஆகும். மேற்படி ஆண்டிபாளையம் திருப்பூரில்தான் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய திருமண தேதி 01.12.1985. எனக்கு திருமணம் ஆன தேதியிலிருந்து 27.09.1989 வரை என் கணவர் ராஜேந்திரன் என்னுடன் திருப்பூரில்தான் இருந்தார் என்றால் என் தாயார் வீட்டிலும் இருந்தோம், பாப்பம்பட்டியிலும் இருந்தோம். பாப்பம்பட்டடியில் நானும், என் கணவரும் குடும்பத்துடன் குடியிருந்ததைக் காட்டுவதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. நாங்கள் குடியிருக்கவில்லை, வந்து செல்வோம்.

11. என்னுடைய கணவரின் வாரிசுச்சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்துள்ளோம். நான் கூறுவது

தவறு என்றும், சான்றிட்ட நகல் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய கணவர் இறந்ததற்குப்பின்னிட்டு எனக்கும், என் மகளுக்கும் இருவரின் பராமரிப்புச் செலவிற்காக ரூ.7,00,000/–த்தை என் தகப்பனார் அப்பாசாமி என்ற சண்முகத்திடம் முருகவேல் செட்டியார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு முருகவேல் செட்டியார் பணம் கொடுத்தது உண்மை என்றும், மேற்படி விபரத்தை ஒத்துக்கொண்டால் வழக்கு பாதிக்கும் என்பதால் நான் பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. என் கணவர் அவரது தகப்பனாரான முருகவேல் செட்டியாரை அவர் உயிருடன் இருக்கும் வரை பராமரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் மாமனார் என் தகப்பனாரின் ஒன்றுவிட்ட தாய்மாமா என்பதால் என் மாமனாரும், மாமியாரும் அடிக்கடி திருப்பூரில் என் பெற்றோர் வீட்டில் வந்து இருப்பார்கள். அடிக்கடி திருப்பூருக்கு வந்து இருப்பதாக மிகைப்படுத்திக் கூறுவதாகச் சொன்னால் சரியல்ல. அந்த உறவு முறை மற்றும் நம்பிக்கையால்தான் முருகவேல் செட்டியார் என் தகப்பனாரிடம் ரூ.7,00,000/–த்தை கொடுத்ததாகச் சொன்னால் சரியல்ல.

12. 1989ல் ரூ.7,00,000/– என்பது ஒரு பெரிய தொகை என்றால் சரிதான். முருகவேல் செட்டியார் என் கணவர் உயிருடன் இருக்கும்போது பலமுறை பணம் கொடுத்து உதவியிருக்கிறார் என்றால் சரியல்ல. மேற்படி விபரங்கள் முருகவேல் செட்டியார் எழுதிவைத்துள்ள உயிலில் உள்ளது என்றால், உயில் மோசடியானது. முருகவேல் செட்டியார் எழுதிய உயில் மோசடியானது என்று அ.வ.எண்.1/2007 வழக்கில் நாங்கள் எதிர்வாதம் செய்யவில்லை என்றால் வேறுமாதிரிதான் சொல்லியிருக்கிறோம். அ.வ.எண்.1/2007 வழக்கு தீர்ப்பில் 7,8 பிரதிவாதிகள் முருகவேல் செட்டியாரின் உயிலை ஆட்சேபணை செய்து வழக்கை நடத்தவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13. எனக்குத் திருமணம் ஆனது 1985ம் வருடம் என்றால் சரிதான். எங்கள் திருமணத்திற்கு முன்னர் முருகவேல் செட்டியார் குடும்பத்தில் நடந்த நிகழ்வுகள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். 18.10.1974 தேதியிட்ட வா.சா.ஆ.11 கிரைய ஆவணம் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது, யாரிடம் கிரையம் பெறப்பட்டது என்ற விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் என் கணவர் எங்கள் திருமணத்திற்குப்பிறகு சொல்லித்தான் தெரியும். மேற்படி விபரம் எனக்கு நேரடியாக

தெரியாது என்றால் நாங்கள் உறவினர்கள் என்பதால் விஷேசங்களுக்கு வந்து செல்லும்போது இடம் வாங்கிய விபரம் எங்களுக்கு தெரியும். வா.சா.ஆ.11ல் கண்டுள்ள சொத்து 18.10.1974 தேதியில் ஒரு ஏக்கர் மதிப்பு என்ன என்றால் எனக்கு மதிப்பு தெரியாது. வா.சா.ஆ.11 ஆவணத்தின் கிரையத் தொகை என்ன என்றால் எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.11 தேதியிலோ அல்லது அதற்கு முன்னரோ எனது கணவருக்கு வா.சா.ஆ.11ல் கண்டுள்ள தொகையை கொடுக்க வசதியுள்ளது என்பதைக் காட்டுவதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் விவசாயத்திற்கு ஆவணங்கள் கொடுக்கமுடியாது என்பதால் ஆவணங்கள் இல்லை.

14. அ.வ.எண்.1/2007 வழக்கில் இவ்வழக்கு வா.சாஆ.11 ஆவணமானது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.1/2007 வழக்கு தீர்ப்பில் ராஜேந்திரன் தனிப்பட்ட முறையில் கிரையம் பெற வசதியுள்ளது என்ற விபரத்தைப் பொறுத்து சம்பந்தப்பட்ட நபர்கள் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.1/2007 வழக்கின் வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தில் கண்ட சொத்தை என் கணவர்தான் வாங்கினார் என நான் அவ்வழக்கில் சாட்சியமளிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் வா.சா.ஆ.11 கிரையத்தை என் கணவர் வாங்கியதாகச் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

15. வா.சா.ஆ.11ல் கண்ட கிரையத் தொகையை கொடுப்பதற்கு என் கணவருக்கு எவ்விதமான வசதியோ, வருமானமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.12ல் கண்ட கிரையத் தொகையை கொடுப்பதற்கு என் கணவருக்கு எவ்விதமான வசதியோ, வருமானமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.12ல் கண்டுள்ள சொத்து 16.12.1981 தேதியில் ஒரு ஏக்கர் மதிப்பு என்ன என்றால் எனக்கு மதிப்பு தெரியாது. வா.சா.ஆ.12 ஆவணத்தின் கிரையத் தொகை என்ன என்றால் எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.12 தேதியிலோ அல்லது அதற்கு முன்னரோ எனது கணவருக்கு வா.சா.ஆ.12ல் கண்டுள்ள தொகையை கொடுக்க வசதியுள்ளது என்பதைக் காட்டுவதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் விவசாயத்திற்கு ஆவணங்கள் கொடுக்கமுடியாது என்பதால் ஆவணங்கள் இல்லை.

16. வா.சா.ஆ.11ன் அசல் கிரைய ஆவணம் என்னிடம் இல்லை என்று சொன்னால் சரிதான், என் மாமனாரிடம் இருந்தது. வா.சா.ஆ.12ன் அசல் கிரைய

ஆவணம் என்னிடம் இல்லை என்று சொன்னால் சரிதான், என் மாமனாரிடம் இருந்தது. வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 ஆவணங்களுக்குரிய முழுக் கிரையத்தொகையையும் முருகவேல் செட்டியார்தான் செலுத்தினார் என்றும், என் கணவர் பினாமி மட்டுமே என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய கணவர் கிரையத்தொகையைச் செலுத்தினார். என்னுடைய கணவர் கிரையத் தொகையை செலுத்தியதாக சொல்வது பொய் என்றும், சொத்துக்களை அபகரிப்பதற்காக பொய்யாக சாட்சியமளிப்பதாகவும் சொன்னால் சரியல்ல. முருகவேல் செட்டியார் கிரையத் தொகையை கொடுத்ததால்தான் வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 ஆவணங்களின் அசல் ஆவணங்கள் முருகவேல் செட்டியார் வசம் இருந்ததாகச் சொன்னால் சரியல்ல, எப்போதும் ஆவணங்கள் பொதுவாக பெரிய வீட்டில் இருப்பது வழக்கம். வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 கிரையங்கள் என்னுடைய திருமணத்திற்கு முன்பு நடந்தது என்றால் சரிதான். அதனால் வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 கிரையங்கள் குறித்து நான் சாட்சியம் அளிப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் என் கணவர் திருமணத்திற்குப்பிறகு மேற்படி கிரையங்கள் பற்றிய விபரங்களை என்னிடம் சொன்னார்.

17. 18.10.1974 அன்று மொத்தம் எத்தனை கிரையங்கள் நடந்தது என்றால் சூடாமணி வகையறா கிரையங்கள் நான்கும், என் மாமனார், என் கணவர், என் மச்சான்டார் ஆகியோருக்கு தலா ஒரு கிரையமும் நடந்தது. மேற்சொன்ன ஏழு கிரையப்பத்திரங்களின் தேதி எனக்கு ஞாபகமில்லை. 18.10.1974 தேதியிட்ட கிரையங்கள் எந்தத் தேதியில் பதிவானது என எனக்குத் தெரியாது. மேற்படி ஏழு கிரையப்பத்திரங்களுக்கான முத்திரைத்தாள்களை முருகவேல் செட்டியார் வாங்கியதாகச் சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி ஏழு கிரையங்களுக்குமான பதிவுக் கட்டணங்களை முருகவேல் செட்டியார் செலுத்தியதாகச் சொன்னால் எனக்கு ஞாபகமில்லை.

18. பி.வா.சா.ஆ.11 ஆவணத்தில் உள்ள சொத்தை முருகவேல் செட்டியார் தன்னுடைய சொந்த நலனுக்காக பழனி கூட்டுறவு வங்கியில் அந்த சொத்தின் மேம்பாட்டிற்காக அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 1975ம் வருடம் 08.03.1975ல் முருகவேல் செட்டியார் தன்னுடைய சொந்த நலனுக்காக பழனி கூட்டுறவு நில வங்கியில் சொத்தின் மேம்பாட்டிற்காக மோட்டார், பம்புசெட்டுகள்,

பைப்புகள் போன்ற உபகரணங்கள் வாங்குவதற்காக கடன் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.23 ஆவணம்தான் முருகவேல் செட்டியார் மோட்டார், பம்ப்செட்கள் வாங்கிய பில்கள் என்றால் சரிதான். பழனி கூட்டுறவு நிலவள வங்கியில் தவணைத் தொகையைச் செலுத்துமாறு முருகவேல் செட்டியாரை செலுத்தச்சொல்லித்தான் அறிவிப்பு வந்துள்ளது என்றால் சரிதான். அது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.24 என்றால் சரிதான்.

19. 1975ம் வருடமும் முருகவேல் செட்டியார் தன்னுடைய நலனுக்காக சொத்தை அடமானம் வைத்துக் கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான், அவ்வாறு கடன் பெறும்போது எல்லோரும்தான் கையொப்பம் செய்தார்கள். 1976,1977, 1978, 1981, 1982 ஆகிய வருடங்களில் முருகவேல் செட்டியார் தன்னுடைய நலனுக்காக வா.சா.ஆ.1ல் கண்டுள்ள சொத்துக்களை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்று சொன்னால் முருகவேல் செட்டியார் முன்னால் நின்று கடன் வாங்கினாலும், அதில் அனைவரும்தான் கையொப்பம் செய்துள்ளார்கள். வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 சொத்துக்களைப் பொறுத்து முருகவேல் செட்டியார் பணம் செலுத்தி என் கணவர் பெயரில் சொத்துக்கள் வாங்கியதால்தான் அந்த சொத்துக்களை அடமானம் வைத்து முருகவேல்செட்டியார் கடன் பெறுவதற்கு என் கணவர் சம்மதித்ததாகச் சொன்னால் சரியல்ல.

20. மேற்படி ஏழு கிரையங்களும் வெவ்வேறு தேதிகளில் கிரையம் பெறப்பட்டிருந்தபோதிலும், அவை அனைத்தும் முருகவேல்செட்டியாரால் கிரையம் பெறப்பட்டது என்பதால்தான் அவை அனைத்தும் 26.10.1974 அன்று தொடர்ச்சியாக பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கிரையங்கள் பதிவு செய்யப்பட்டது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என்னுடைய பிறந்த வருடம் 1965. 1974ம் வருடம் எனக்கு 9 வயது. மேற்படி ஏழு கிரைய ஆவணங்களும் கிரையம் வாங்கியது முதல் முருகவேல்செட்டியார் வசம்தான் இருந்தது என்றால் சரிதான். உறவினர்கள் என்பதால் சூடாமணி வகையறாவின் கிரைய ஆவணமும் முருகவேல் செட்டியாரிடம் இருந்தது.

21. ஏழு கிரைய ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களையும் முருகவேல் செட்டியார்தான் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான், அவர் குத்தகைக்கு

**உழவு செய்தார். அவ்வாறு குத்தகைக்கு உழவு செய்ததாகச் சொல்வதற்கு ஆவணங்கள் இல்லை என்றால் எனக்குத் தெரியாது.**

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.11.12 20:01:49 +0530

Additional Sub Judge,
Palani.